ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 6.1 – வைகல் பூங்கழி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 6.1 – வைகல் பூங்கழி

‡ வைகல் பூங்கழிவாய் ⋆
வந்து மேயும் குருகினங்காள் ⋆
செய் கொள் செந்நெல் உயர் ⋆
திருவண்வண்டூர் உறையும் ⋆
கை கொள் சக்கரத்து ⋆
என் கனிவாய் பெருமானைக் கண்டு ⋆
கைகள் கூப்பிச் சொல்லீர் ⋆
வினையாட்டியேன் காதன்மையே ‖ **6.1.1** ‖

காதல் மென் பெடையோடு ⋆
உடன் மேயும் கரு நாராய் ⋆
வேத வேள்வி ஒலி முழங்கும் ⋆
தண் திருவண்வண்டூர் ⋆
நாதன் ஞாலம் எல்லாம் உண்ட ⋆
நம் பெருமானைக் கண்டு ⋆
பாதம் கை தொழுது பணியீர் ⋆
அடியேன் திறமே ‖ **6.1.2** ‖

திறங்கள் ஆகி எங்கும் ⋆
செய்கள் ஊடுழல் புள் இனங்காள் ⋆
சிறந்த செல்வம் மல்கு ⋆
திருவண்வண்டூர் உறையும் ⋆
கறங்கு சக்கரக்கைக் ⋆

கனிவாய்ப் பெருமானைக் கண்டு ⋆
இறங்கி நீர் தொழுது பணியீர் ⋆
அடியேன் இடரே ॥ **6.1.3** ॥

இடரில் போகம் மூழ்கி ⋆
இணைந்தாடும் மட அன்னங்காள் ! ⋆
விடலில் வேத ஒலி முழங்கும் ⋆
தண் திருவண்வண்டூர் ⋆
கடல மேனிப் பிரான் ⋆
கண்ணனை நெடுமாலைக் கண்டு ⋆
உடலம் நைந்தொருத்தி ⋆
உருகும் என்றுணர்த்துமினே ॥ **6.1.4** ॥

உணர்த்தல் ஊடல் உணர்ந்து ⋆
உடன் மேயும் மட அன்னங்காள் ⋆
திணர்த்த வண்டல்கள் மேல் ⋆
சங்கு சேரும் திருவண்வண்டூர் ⋆
புணர்த்த பூந் தண் துழாய் முடி ⋆
நம் பெருமானைக் கண்டு ⋆
புணர்த்த கையினராய் ⋆
அடியேனுக்கும் போற்றுமினே ॥ **6.1.5** ॥

போற்றி யான் இரந்தேன் ⋆
புன்னை மேல் உறை பூங்குயில்காள் ⋆
சேற்றில் வாளை துள்ளும் ⋆
திருவண்வண்டூர் உறையும் ⋆
ஆற்றல் ஆழி அங்கை ⋆
அமரர் பெருமானைக் கண்டு ⋆

மாற்றம் கொண்டருளீர் ⋆
மையல் தீர்வதொரு வண்ணமே ‖ **6.1.6** ‖

ஒரு வண்ணம் சென்று புக்கு ⋆
எனக்கொன்றுரை ஒண் கிளியே ⋆
செரு ஒண் பூம் பொழில் சூழ் ⋆
செக்கர் வேலை திருவண்வண்டூர் ⋆
கரு வண்ணம் செய்ய வாய் ⋆
செய்ய கண் செய்ய கை செய்ய கால் ⋆
செரு ஒண் சக்கரம் சங்கு ⋆
அடையாளம் திருந்தக் கண்டே ‖ **6.1.7** ‖

திருந்தக் கண்டெனக்கொன்றுரையாய் ⋆
ஒண் சிறு பூவாய் ⋆
செருந்தி ஞாழல் மகிழ் ⋆
புன்னை சூழ் தண் திருவண்வண்டூர் ⋆
பெரும் தண் தாமரைக் கண் ⋆
பெரு நீள் முடி நால் தடம் தோள் ⋆
கரும் திண் மா முகில் போல் ⋆
திருமேனி அடிகளையே ‖ **6.1.8** ‖

அடிகள் கை தொழுது ⋆
அலர்மேல் அசையும் அன்னங்காள் ⋆
விடிவை சங்கொலிக்கும் ⋆
திருவண்வண்டூர் உறையும் ⋆
கடிய மாயன் தன்னைக் ⋆
கண்ணனை நெடுமாலைக் கண்டு ⋆

கொடிய வல் வினையேன் ⋆
திறம் கூறுமின் வேறு கொண்டே ‖ **6.1.9** ‖

வேறு கொண்டும்மை யான் இரந்தேன் ⋆
வெறி வண்டினங்காள் ⋆
தேறு நீர்ப் பம்பை ⋆
வடபாலைத் திருவண்வண்டூர் ⋆
மாறில் போர் அரக்கன் ⋆
மதிள் நீறெழச் செற்றுகந்த ⋆
ஏறு சேவகனார்க்கு ⋆
என்னையும் உளள் என்மின்களே ‖ **6.1.10** ‖

‡ மின் கொள் சேர் புரிநூல் குறளாய் ⋆
அகல் ஞாலம் கொண்ட ⋆
வன் கள்வன் அடி மேல் ⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
பண் கொள் ஆயிரத்துள் இவை பத்தும் ⋆
திருவண்வண்டூர்க்கு ⋆
இன் கொள் பாடல் வல்லார் ⋆
மதனர் மின் இடை அவர்க்கே ‖ **6.1.11** ‖

அடிவரவு — வைகல் காதல் திறங்களாகி இடரில் உணர்த்தல் போற்றி ஒருவண்ணம் திருத்த அடிகள் வேறு மின்கொள் மின்னிடை

வைகல் பூங்கழி முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்